உ

விராட் விஸ்வப்பிரம்மணே நம :



நீர்வேலி வடக்கு - சங்கணவைப்பதி,

## ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன்

# ஆலய வரலாறு

உ

சிவமயம்



நீர்வேலி வடக்கு - சங்கணவைப்பதி,

# ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பிகையின்

# எழுந்தருளித் தோற்றம்

# ஆசியுரை

## ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மனின்
## திருவருள் பிரகாசிக்கட்டும்

ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயம் இற்றைக்கு முன்னூறு வருட காலமாக இருந்து வருவதாகவும், எமது அரசகேசரிப் பிள்ளையார் ஆலயம் ஆரம்பிக்கப்பட்டபின் நீர்வேலியில் முதலாவது (அம்மன்) கோயிலாகவும் அமைந்ததாக அறிந்தோம். இக்கோயிலை ஆரம்பித்தவர் ஸ்ரீ விநாயகாச்சாரியாரென்பவர். இவரின் கனிஷ்ட வாரிசுகளாகிய ஸ்ரீ கா. பொன்னம்பலம், கா. செல்லையா ஆகியவர்களும் தொடர்ந்து இவர்களின் மருமகன் கணேசையாவும் ஆலயத்தை நிர்வகித்து வந்தவர்களாவார். இன்று இவ்வரலாற்றைக், குறித்த ஸ்ரீ விநாயாச்சாரியாரின் நான்காவது தலைமுறைச் சிரேஷ்ட சுதன் தெட்சணாமூர்த்தி கோபாலசிங்கம் வெளிக்கொணர்வது சாலப் பொருந்துவதாகும்.

நான் மேற்படி இராஜராஜேஸ்வரி அம்மனின் ஆலய மகா கும்பாபிடேகமொன்றை 1974ம் ஆண்டில் பிரதம குருவாயிருந்து நடாத்திவைத்தேன். இதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னர் எமது பாட்டனார் கதிரேசக்குருக்கள், தியாகராசாக்குருக்களே குருவாக இருந்து சகல பூசாகாரியங்களையும் நடாத்தி வந்தார். இவர் மூலம் நான் மேற்படி ஆலய ஸ்தாபகர் பரம்பரைபற்றியும், ஆலய தோற்றம் பற்றியும், அம்பிகையின் அருட் செயல்கள் பற்றியும் அறிந்தேன். அதன் பிரகாரம் இன்று வெளிவரும் இவ்வரலாறும், உள்ளுறையாகிய அம்பிகையின் அருட்செயல்களும் உறுதியும் மகிமையும் பெறுகின்றன. எனவே இவ்வரலாற்று நூலினை யாவரும் வாசித்து அருள்மிகு இராஜராஜேஸ்வரி அம்மனின் மகிமையை உணர்ந்து வணங்கி அவரின் திருவருட் கடாட்சத்தைப் பெற்று யாவரும் உய்திபெறுமாறு வேண்டி எனது நல்லாசிகளையும் வழங்குகின்றேன்.

**அம்பிகையின் திருவருள் நிலைபெறட்டும்!**

இங்ஙனம்,
சதாசாரக்கிரியாமணி,
கா. சாம்பசதாசிவக்குருக்கள்

அரசகேசரிப்பிள்ளையார் தேவஸ்தானம்
நீர்வேலி, யாழ்ப்பாணம்.

## முகவுரை

மேற்படி சங்கணவைப்பதி ஸ்ரீ இராஜேஸ்வரி அம்மன் ஆலயம் சிறிதாகவும்-பெரிதாகவும், பழைமையாகவும்-புதுமைபெற்றும் முன்னூறு வருட காலமாக இச்சங்கணாக்கடவை மண்ணில் நின்று வந்துள்ளது. அக்காலத்தில் இக்கோயிலை ஆரம்பித்தவர் முதல் முதலாக நீர்வைக்கண் வந்து குடியமர்ந்த எம்மவர், மாவண்டூர் ஸ்ரீ சிங்கப்பாச்சாரி பரம்பரையினராகிய விஸ்வப் பிரம்மஸ்ரீ விநாயகாச்சாரியார் என்பவரே. அதாவது, இவரின் மூத்த மகன் ஆறுமுகாச்சாரி (ஆறுமுகாச்சாரியாரின் இளைய சகோதரனே நன்னியராச்சாரியார் ஆவார்) யாரின் ஆண்மக்கள் ஸ்ரீ வைத்திலிங்க ஆச்சாரியார் (பெரிய ஐயர்), ஸ்ரீ கனகசபாபதி ஆச்சாரியார் (சின்னையர்) எனும் இருவருமாவார். வைத்திலிங்க ஆச்சாரியாரின் மூத்த புதல்வன் தெட்சணாமூர்த்தி ஆச்சாரியார். இவரின் மகனே சிறியேனாகிய தெட்சணாமூர்த்தி கோபாலசிங்கம் ஆவேன். ஸ்தாபகரின் கனிஷ்ட சுதபரம்பரையினர் ஸ்ரீ நன்னியராச்சாரியாரும், நன்னியராச்சாரியாரின் வாரிசுகள் காசிப்பிள்ளை, சின்னத்தம்பி ஆகிய சகோதரர்களும், காசிப்பிள்ளை-பொன்னம்பலமும், காசிப்பிள்ளை-செல்லையாவும் ஆவர். செல்லையாவின் மகளார் காமாட்சியின் கணவரே தமது காலத்தில் மேற்படி ஆலய நிர்வாகஸ்தராக இருந்து அண்மைக்காலத்தில் மறைந்த ஸ்ரீ கந்தையா கணேசையா ஆவார். இவ்வாலயம் அமைந்துள்ள காணியும் அருகமைந்திருந்த பெருநிலப்பரப்பும் குறித்த ஸ்ரீ விநாயகாச்சாரியாருக்கும் ஆறுமுகாச்சாரியாருக்கும் பின்னர் இவரின் சிரேஷ்ட, கனிஷ்ட சுதபரம்பரையினருக்குமே தொடர்ந்து இருந்து வந்துள்ளன என்பதைக் காணி உறுதிகளும் பிறவும் பகராநிற்கும்.

எனவே, மேற்படி ஆலய ஸ்தாபகர் ஸ்ரீ விநாயகாச்சாரியாரின் சிரேஷ்ட சுத வரிசையில் நான்காவது புத்திரனும், கனிஷ்ட பரம்பரைக்கும் ஒருவனாக ஈற்றில் இருப்பவனும் ஆகிய சிறியேன் அடியவர் சிலரால், முக்கியமாக ஸ்ரீ தம்பு பத்மநாதனவர்களால் ஏவப்பெற்று இவ்வரலாற்றினை எழுதலானேன். நிற்க. தொன்மை

காரணமாக. இவ்வாலயத் தலைவி ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மனை ஆடற்றெய்வமாகவும், கலைத்தெய்வமாகவும், காத்தற்றெய்வமாகவும், துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனஞ் செய்பவராகவும் கண்டுகொண்டு, தகைமைக்கேற்றவாறு திருவருள் பெற்றுக் கூறிவந்தவர்கள் பல்லோர். அது மாத்திரமன்றி - நீர்வையில் ஒரேயொரு ஆதி அம்மன் கோயிலாக இருந்தமையால், எதுவித ஏற்றத்தாழ்வு மனப்பான்மையுமின்றி யாவராலும் போற்றி வணங்கப்பெற்று வந்தவரே இப்பழைய அம்மன் என அழைக்கப்பெறும் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் ஆவாள். இவள் பழைமைக்கும் புதுமைக்கும் பெயர்த்தும் அப்பெற்றியளாவாள். ஷை அம்பிகையின் நீண்ணெடுங்கால அருட்செயல்கள் அனந்தம்- இரண்டொன்றே இச்சிறு நூலின் கண் குறிப்பிடப்பட்டுள்ளன. ஏனைய பல விரிவஞ்சி விடுக்கப்பெற்றுள.

மேற்படி ஆலயம் இன்று ஒரு பொது நிர்வாகத்தினரால் நடாத்தப் பெற்றுக்கொண்டும், புதுமை பெற்றும் வருகிறது. பலவித ஆக்கப்பணிகள் நிறைவேறியும், நிறைவேற்றப் பெற்றுக்கொண்டும் இருக்கின்றன. இஃது பெரிய கற் கோயிலாகவும், கலைக் கோயிலாகவும் காணக்கூடியதாக மென்மேலும் வளரும் என நம்புவோமாக. வெகுவிரைவில் யாவும் நிறைவேறி அம்பிகை மனமகிழ்ந்து யாவரையும் அணைத்து அருள்பாலிப்பார். இவற்றைச் சூக்குமமாக இருக்கும் ஸ்தாபகர் ஸ்ரீ விநாயகாச்சாரியார் கண்டு மனங்குளிர்ந்து அடியவரனைவரையும் ஆசீரவதிப்பார் என்பதில் ஐயமில்லையாம்.

*வாழ்க திருப்பணி, வாழ்க அடியார் கூட்டம்.*

**அன்புடனெம் மருகிருந்தே யடியார்க் கென்றும்**
**அருளாடிப் பொருளாடி யறிவும் ஆடும்**
**இன்முகங்கொள் ளிராஜரா ஜேஸ்வ ரித்தாய்**
**இட்டமுட னிலங்குபத மெடுத்தே யாடி**
**மன்பதைக்கு வருந்துயர்கள் வடித்தே காக்கும்**
**மாண்பரிய தேவிபரா சத்தி யாவாள்**
**கன்மவினை கடிந்தபய கரமுங் காட்டிக்**
**காத்திடுவாள் பணிந்துகடைத் தேறு மின்னே!**

உயிலி வளவு,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

02-09-2003

கோபால கிருஷ்ணபராக்கிரமசிங்காச்சாரி
எனும் நாமம் சூட்டப்பெற்ற,
**தெட்சணாமூர்த்தி கோபாலசிங்கம்.**

உ

விராட் விஸ்வப்பிரம்மனே நம :

நீர்வேலி வடக்கு - சங்கணைவைப்பதி

# அருள்மிகு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன்

# ஆலய வரலாறு

## காப்பு

இந்திய தமிழ்நாட்டு மாவண் டூர்க்கன்
இருந்தசிங்கப் பாச்சாரி மரபிற் றோன்றி
இந்நாட்டில் வதிந்தபராக் கிரமசிங் காச்சாரி
ஏழாந் தலைமுறையோன் விநாய காச்சாரி
சிந்தை கொண்டு நீர்வையிலுற் பத்தி செய்த
சீர்கெழுசங் கணைவையுறை பழைய அம்மன்
செந்தளியின் வரலாற்றை வரைய வெற்குச்
சித்திவிநா யகன்றிருத்தாள் காப்ப தாமே!

## அம்மன் துதி

ஆதியா யனாதியா யண்டகோ டிகளையீன்ற
அன்னையாய்த் தந்தையாகி யனைத்துமாய் நின்றநீயே
சோதியா யுயிர்கட்கென்றும் சுகமுமாய் நயமுமாகிச்
சொந்தமாய்ப் பந்தமாகிப் படர்கொழு கொம்புமாகி
நீதியாய் நீதிகாக்கும் நிர்மல சொருபியாயும்
நின்றநின் றன்னைக் கோயில் கட்டிநீர் வையினில் வைத்த
கோதிலா வரலாறஃதைக் குணமிலாச் சிறியேன்கூறக்
குற்றங்க ளுறாதுகாப்பா யெங்குல தெய்வத்தாயே !

இவ்வாலயம் நீர்வேலியில் எழுந்த இரண்டாவது கோயிலும், முதலாவது அம்மன் கோயிலும் ஆகும். இதன் தொன்மை கருதியே இஃது பழைய அம்மன் கோயில் என யாவராலும் அழைக்கப்பெற்று வருகின்றதெனலாம்.

இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயம் ஏறத்தாழ முந்நூறு வருடசரித்திரங் கொண்டதாகும். இந்திய தமிழ் நாட்டு மாவண்டூரில் இராமாயண கால கம்பநாட்டாழ்வார் தம்மகன் அம்பிகாவதிக்குக் குலோத்துங்க சோழ மன்னனால் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டதன் காரணமாக, விரக்தியுற்று இரவோடிரவாகச் சோழதேசத்தை விட்டுச் சேரநாட்டிற்கு மாறுவேடத்தில் புறப்பட்டுச் சென்ற பொழுது, இடைவழியில் இடிமின்னலோடு கடும் மழை பொழியக் கண்டு, ஆங்கண் இருந்த சிங்கப்பாச்சாரியென்பாரின் வீட்டில் இரவு தங்கவேண்டியதாயிற்று.

கம்பநாட்டாழ்வாருக்கு உணவளித்து உறங்கவைத்து உபசாரஞ்செய்த மேற்படி மாவண்டூர்ச் சிங்கப்பாச்சாரியின் சிரேஷ்ட வழித்தோன்றலாகிய ஸ்ரீ பராக்கிரம சிங்காச்சாரியாரே தமது மனைவியார் காவேரியம்மையாருடனும், சகோதரர்களுடனும் 15ம் நூற்றாண்டில் அரச வேண்டுகோளின் பிரகாரம், இலங்காபுரிக்குக் கடல் மார்க்கமாக வந்து யாழ்ப்பாண மண்ணில் குடியேறினார். மேற்படி பராக்கிரமசிங்காச்சாரியாரின் ஏழாந்தலைமுறை மகனார் தமிழ்ப்புலவரும், சமஸ்கிருத வித்துவானுமாகிய ஸ்ரீ விநாயகாச்சாரியாரே எமது அம்பிகைக்கு ஆலயம் எழுப்பியவராவார். தொடர்ந்து, இவரின் மூத்த மகனார், தமிழ், சமஸ்கிருத, சங்கீத, நாடக போதனாசிரியராகிய ஸ்ரீ ஆறுமுக ஆச்சாரியார் தமது இளைய சகோதரர் நன்னியராச்சாரியாரின் உதவியுடன் ஆலய பூசாகாரியங்களை நிறைவேற்றிவந்தார். பின்னர், இவரைத் தொடர்ந்து நன்னியராச்சாரியாரின் புதல்வர்களாகிய காசிப்பிள்ளையவர்களும், சின்னத்தம்பி அவர்களும், இவர்களின் பின், காசிப்பிள்ளையவர்களின் புத்திரர்களாகிய பொன்னம்பலமும், கா. செல்லையாவும் கோயிலை நிர்வகித்து வந்தனர். தொடர்ந்து கா. செல்லையா அவர்களின் மருமகன் கந்தையா கணேசையா அவர்கள் கோயிலைப் பொறுப்புடன் நடாத்திவந்தார்.

மேற்படி ஆலயம் அமைந்துள்ள காணியும், இதைச்சேர்ந்த காணிகளும் குறித்த விநாயகாச்சாரியாருக்கும், மகன் ஆறுமுகாச்சாரியாருக்கும், நன்னியர் ஆச்சாரியாருக்கும், ஆறுமுகாச்சாரியாரின் மக்கள் ஆ. வைத்திலிங்க ஆச்சாரியாருக்கும், ஆ. கனகசபாபதி ஆச்சாரியாருக்கும், நன்னியர் ஆச்சாரியார் மக்களாகிய காசிப்பிள்ளைக்கும் சின்னத்தம்பிக்கும்,

தொடர்ந்து இவர்களின் வாரிசுகளுக்குமே உரித்தானவையெனத் தோம்புகளும். காணி உறுதிகளும் சான்றுபகரும். குறித்த விநாயகாச்சாரியாருக்கும் மகன் ஆறுமுகாச்சாரியாருக்கும் உரித்தான சங்கணாக்கடவை எனும் பெரும் விஸ்தீரணம் கொண்ட காணியின் கீழ்ப்பாரிசத்திலே இவர்களின் மனுத் தொழிற் கம்மாலயமும் அமைந்திருந்தது. இந்த ஆறுமுகம் கம்மாலையிலேதான் நீர்வேலியில் அன்று வாழ்ந்த பெரியார் அரியரிவட்டர் என்பார் தமக்குற்ற அம்மைநோய் தீர்த்தற் பொருட்டுத் தாம் பாடிய, நீர்வேலிக்கேயுரித்தான வசந்தன் பாடல்களுக்காய வசந்தன் ஆட்டம் பயிற்றப்பட்டதும் அன்றைய வரலாறாகும்.

இக் கம்மாலயத்தருகில், ஒரு குறிப்பிட்ட நிலையத்தில் திடீர்திடீர் என ஒரு தீப்பொறி மின்னிமின்னிப் பலகாலுந் தோன்றி வந்தது. இதைக் கண்ணுற்றதிசயித்த இக்கம்மாலயத்தார் செவியுறக்கூடியதாக, தாமேயாங்கண் அவ்வண்ணம் காட்சி கொடுத்து வருவதாகவும், அவ்விடத்திலோர் ஆலயம் அமைத்துத் தன்னையிருத்தி வழிபாடு செய்யுமாறும் ஓர் அசரீரி அறிவுறுத்திற்றாம். மேற்படி விநாயகாச்சாரியார் இவ்வசரீரி கேட்டு மனம்மிக மகிழ்ந்து அவ்வண்ணமே தெற்குவாசல் அமைந்த ஒரு சிற்றாலயம் எழுப்பி இந்தியாவில் இருந்து தாம் கொணர்ந்த, கருங்கல்லினாலாய அம்பிகையின் திருவுருவச் சிலையை முறைப்படி பிரதிட்டை செய்து, தாமே குடமுழுக்கும், உரிய பூசைகளும் சைவாகம முறைப்படி செய்து வணங்கி வந்தனரெனலாம். இம்மூலவிக்கிரகமே இன்றும் மூலமூர்த்தியாகவிருந்து அபிடேகங்களையும் பூசைகளையும் ஏற்று அருள்பாலித்து வருகிறதெனலாம்.

இற்றைக்குத் தொண்ணூறு வருடங்களுக்கு முன்னர். சில அசௌகரியங்கள் காரணமாக, முன்னைய ஆலயம் முற்றாக நீக்கப்பெற்று. அவ்விடத்தில் நான்கு மண்டபங்கள் கொண்ட விசாலமான வடக்குவாசல் கோயில் கட்டப்பெற்று, பங்குனி உத்தரப் பெருநாளில் முறைப்படி குடமுழுக்கும் செய்யப்பெற்று பின்னர், இங்கு நவராத்திரி, திருவெம்பாவை, வருடாந்தப் பொங்கல், வருடாந்தப் பங்குனி உத்தரப் பெருவிழா ஆகியவை செய்யப்பெற்று. திருவூஞ்சல் அன்னதானச் சிறப்புக்களுடன் நடந்தேறி வந்தன. மேற்குறிப்பிட்ட தெய்வீக வசந்தனும் வருடாவருடம் அடிக்கப்பெற்று வந்ததெனலாம்.

பின்னர். மண்டபங்கள் திருத்தப்பட வேண்டியிருந்ததாலும். அம்பிகையின் அறிவுறுத்தலினாலும். இக்கோயில் 1971ம் ஆண்டில் குறித்த கா. செல்லையா அவர்களினால் முற்றாக நீக்கப்பெற்று. கர்ப்பக்கிரக மண்டபமும் விமானமும், பண்டிகையோடு கூடிய தூபியும், ஏனைய மண்டபங்களும் இந்திய சிற்பவல்லுனர் பெரியசாமி ஆச்சாரியார் அவர்களின் மேற்பார்வையில், ஆரம்பகாலத்திலிருந்தது போன்று தெற்குவாசல் கோயில் கட்டப்பெற்று, 1974ம் ஆண்டு பங்குனி உத்தரப் பெருநாளில் குடமுழுக்கும் சிவஸ்ரீ கா. சாம்பசதாசிவக் குருக்களின் தலைமையில் முறைப்படி செய்யப்பெற்று பூசைகளும் திருவிழாக்களும் முன்னர் போன்று நடைபெற்று வந்தன. இச் செலவுகள் யாவும் கா. செல்லையா அவர்களினால் செய்யப்பெற்றன. கா. செல்லையா அவர்களைத் தொடர்ந்து, கோயில் பொறுப்பு முழுவதும், அவரின் மகளின் அனுசரணையுடன், கணவர் கந்தையா கணேசையா அவர்கள் மேலாயிற்று. இவர் தங்கள் முழுச் செலவிலேயே ஒரு தம்பமண்டபம் கட்டுவித்தார்.

1994ம் ஆண்டு சிவராத்திரி கால நான்கு சாமப் பூசைகளும், ஆவணி விநாயக சதுர்த்தி விழாவும் ஆரம்பிக்கப் பெற்றன. அத்துடன், நீர்வேலி அருள்மிகு செல்லக் கதிர்காம சுவாமி கோயில் கந்தர்சஷ்டி பூசைக்காலத்தில், முருகப் பெருமானுக்கு அம்மன் சக்திவேல் வழங்கும் வைபவமும் இக்கோயிலில் ஆரம்பிக்கப் பெற்றது. கந்தையா கணேசையா அவர்களும் யாவற்றையும் கண்ணுற்ற மனநிறைவுடன் சிவபதமெய்தினார். எனினும், கணேசையா அவர்கள் தமது இறுதிக்காலத்தில் கோயில் கடமைகளில் அதுவரை சேர்ந்திராதவர்களையும் ஒன்றுசேர்த்துவிட்டே மறைந்தார்.

1994ம் ஆண்டில் இப்பிரதேசங்களையும் உலுக்கிய நாட்டுக் கலவரங்களினால் ஊரவர்கள் யாவரும் இடம் பெயரவேண்டிய நிலை உருவாகியது. எமது அம்பிகையின் ஆலயவிமானமும். பண்டிகையோடு சேர்ந்த ஸ்தூபிப் பாகங்களும், ஏனைய சில பகுதிகளும் எறிகணை வீச்சுக்களினால் சேதமுற்றன. 1996ம் ஆண்டில் மக்கள் தத்தம்

இல்லிடங்களுக்குத் திரும்பவும் வந்து வதியலாயினர். இவர்கள் இக்கோயிலின் அநாதரவான நிலையைக் கவலையுடன் கண்ணுற்று, தம்மாலியன்ற பொருள் உதவிகளையும், சரீர உதவிகளையும் மனமுவந்து நல்கினர். ஆலயத் திருத்த வேலைகள் துரிதகதியில் பூர்த்தியாயின.

சில அடியவர்களின் பெருமுயற்சியினாலும், வெளியிடங்களிலிருந்து வந்த பண உதவியினாலும், புதிதாக நந்தியும் பலிபீடமும் பிரதிட்டை செய்யப்பெற்றன. வைரவப் பெருமானுக்கு உரிய நிலையத்தில் சிற்றாலயம் ஒன்று கட்டப்பெற்றது. பழுதுற்ற பழைய மடப்பள்ளிக்குப் பதிலாக, புதிய மடப்பள்ளியொன்று கட்டப்பெற்றது. இத்திருப்பணிக்கு இவ்வூரைச் சேர்ந்த திரு. சிவக்கொழுந்து தியகாராசா அவர்கள் தமது பங்களிப்பாக நிதியுதவி வழங்கியுள்ளார். இதன் வேலைகள் முழுவதும் நிறைவுறா நிலையில் உள்ளன. கோயிலின் கிழக்குப் புறவீதியும் விசாலிக்கப்பெற்று, இவ்வீதிச் சுற்றுமதிலும் கட்டப்பெற்றுள்ளது. இந்த நிலையிலே 1998ம் ஆண்டு ஆவணிமாதம் 24ம் திகதி உத்தர நட்சத்திரமுங்கூடிய சுபமுகூர்த்தத்தில் குடமுழுக்கும் பூரணமாக இயற்றப்பெற்றுத் தொடர்ந்து மண்டலாபிடேகமும் நிறைவெய்தியதெனலாம். வழமையான பூசைகள் திருவிழாக்கள் யாவும் இனிதே நடைபெற்றுவருகின்றன.

**ஆலயத் தரிசனம் கோடி புண்ணியம்.**

## இது போழ்து, 2003ம் ஆண்டில் நடற்தேறிய தெய்வ கைங்கரியங்கள்

இவ்வருடம் எம் அம்பிகையின் ஆலய வளர்ச்சியில் சிறப்பான ஒரு காலகட்டம். இரண்டு சிறப்பான செயற்பாடுகள் நிறைவேறியுள்ளன.

இவ்வாலய வளர்ச்சியில் ஒரு மைல்கல்லாக, இதுகாறும் இருந்து வந்த சிறிய எழுந்தருளி மண்டபத்திற்குப் பதிலாக, உரிய நிலையத்தில் விசாலமான, பெரிய, வனப்புவாய்ந்த வசந்தமண்டபம் ஒன்று உருப்பெற்றுள்ளது. இப் புண்ணிய கைங்கரியத்தை எம்மவர். காலஞ்சென்ற கந்தையா

இராசரத்தினம் அவர்களின் மக்கள் குடும்பத்தினர் பெருமனங்கொண்டு நிறைவேற்றியுள்ளனர். இ∴து, எங்கள் அம்பிகையின் ஆலயச் சிறப்பை மென்மேலும் அதிகரிப்பதாக அமைந்துள்ளது. இவர்கள் யாவரும் சீருஞ் சிறப்பும் மிக்குயர்ந்து பொன்னான வாழ்வு வாழ அம்பிகை தண்ணருள் புரிவாராக.

வெட்டவெளியில் அமைந்திருக்கும் இக்கோயிலுக்கு உட்பிரகாரச் சுற்றுமதில் இல்லாதது பெருங்குறையாகவிருந்தது. இந்நிலையைக் கண்ணுற்று மனமிக வருந்திய எமது தம்பு பத்மநாதனும், அவரின் மக்களுமாக இப்பெருங் குறையை நிறைவு செய்யமுனைந்து உட்பிரகாரச் சுற்றுமதிலைக் கட்டி உதவியுள்ளனர். இ∴து, இவ்வாலயத்துக்கு ஒரு கோயில் அமைவையும், அழகையும், பாதுகாப்பையும் தருவதாகவுள்ளது. இவர்களுக்குச் சகல சௌபாக்கியங்களையும் ஈந்து, நிறைவான வாழ்வு வாழ கருணாமூர்த்தியாகிய அம்பிகை அருள்பாலிப்பாராக.

**பொருள்வளமுங் கலைவளமும் பொருந்தி யோங்கப்**
**புவித்தலத்து மகிமையெலாம் பெற்றே யோங்க**
**இருளறுநற் சிந்தைநிறை வுற்றே யோங்க**
**ஈகையும் இலம்பையிலா நிறைவும் ஓங்கக்**
**கருதரிய அறிவுகலைக் ஞானம் ஓங்கக்**
**காமுறுசெம் பொருள்வளமும் வாய்த்தே யோங்கக்**
**குருவருளுந் திருவருளும் இதயங் கூர்ந்தே**
**கூடவருள் கூர்கவெம் பிராட்டி யாரே.**

***" ஆலயம் சமைத்தலும் பூசைகள் நிகழ்த்தலும்***
***ஆன்ம ஈடேற்றத்திற் கருந்துணை ஆகுமாம் "***

உ

# ஆடல் அணங்கு - கவியருளுங் காரிகை

1968ம் ஆண்டில் சிறியேன் கொழும்பு வெள்ளவத்தையில் இருந்த காலத்தில், நவராத்திரி பூசை ஆரம்பமாகிறது. நள்ளிரவில் எமது அம்பிகை கனவினிற்றோன்றித் தனது திருக்கரத்தினால் என்னை அடித்து எழுப்பித் தாம்பூலந் தந்து, கால் பதித்தாடியசைந்து, அந்த ஆட்டத்தின் தாளலயத்துக்கு ஏற்ப பண்ணும் பதமும் காட்டியுருக் கொடுத்தனள். அவள் தாளின் தாள லயத்தைப் பார்த்து என் கால்கள் தாளம்போட, வாய் ஏதோ ஓர் இராகத்தில் முரல, எழுதத்துடித்த என் வலது கரம் எழுத்து வடிவில் ஓடியது. பாடலின் தோற்றுவாயின் இறுதி நான்கடிகளும் இதோ :-

விண்ணதிரப் பெரும் மண்ணதிர — அகம்
விம்மிடச் சக்தியுடன் றெழுந்தாள்
பண்ணவ ளாய்நற் பதம்அவ ளாய்வரும்
பாங்கினைப் பாடும்பி ழைபொறுப்பீர்.

உருப்பெற்ற பாடலில் முதலாவது :-

சந்ததமும் அருள் தந்திடும் அன்னை
தயாபரி யென்னும் பெயருடையாள்
அந்தரமும் நிலம் நீர்அருங் காலொடு
தீயது மாகி விரிந்திருப்பாள்
முந்தை வினைகளைப் போக்கிடு வாளிவள்
மூர்க்கமுங் கொண்டுல காட்டிடுவாள்
சிந்தை தெளிந்தினி தோதிடு வாரிடர்
தீர்க்கும் மகாசக்தித் தாயிவளாம்.

தொடர்ந்து, மேலும் ஒன்பது பாக்கள் அக்கணமே பூர்த்தியாயின. பண்ணும் பதமும் தெறிக்கப் பரதமிட்டுக் காட்டி உருக்கொடுத்து இயக்கிய இப்பரதேவியின் மகத்துவத்தை என்னவென்போம்! உண்மையிலே, இவள் ஓர் ஆடல் அணங்கு, – கவியருளுங் காரிகையேயாம். இவள் தந்த பிச்சையினால்தான் நான் பாடினேன், பாடிக்கொண்டேயிருக்கிறேன்.

**பண்ணொடு பதமும்சேரப் பதமெடுத் தாடிக்காட்டிப்**
**பாடெடா எனப்பணித்த பாங்கதும் என்னே என்னே!!**

உ

# அம்பிகை - எம் அநாதரட்சகி (சிஷ்டபரிபாலனம்)

இற்றைக்கு ஏறத்தாழ எண்பது வருடங்களுக்கு முன்னர் நீர்வேலி–சுன்னாகம் வீதியில் ஆல், அரச மரங்கள் நின்றன. அவ்விடம் அஞ்ஞான்று சனசஞ்சாரங் குறைந்த இடமாகும். ஓர் இருள்மண்டிய இராக் காலத்தில், அன்றிருந்த எங்கள் மூதாதையர் வீரவாகு வல்லிபுரம் என்பார் அவ்விடத்தை அடைந்து விட்டார். ஆங்குப் பயங்கரமான பெரியவோர் உருவத்தின் பார்வையுட்பட்டு, தனித்த நிலையில், வேறெதுவும் செய்யவியலாது இவர் **"ஐயோதாயே பழையவளே! எங்குலதேவி! இங்குவந்து எனக்கு உயிர்ப்பிச்சை தந்தென்னைக் காத்தருள்வாய்"** என்று அபயக் குரல் எழுப்பினார்.

**என்னருட் டாயே யோலம்**
**ஏதிலார் துணையே யோலம்**
**பன்னெடுங் கால மாயெம்**
**பகையெலாங் களைவோ யோலம்**
**இன்றுபே ரிடிக்கண் உற்றேன்**
**எனக்குயிர்ப் பிச்சை ஈய**
**மின்னெனத் தோன்றி யென்னை**
**மீட்டிடா யோலம் ஓலம்.**

என்னுமாபோல் ஓலம் செய்தார். இவருக்கு அபயம் கொடுப்பான் வேண்டி, எம் தாயாள் இம்மென வாங்கண் தோன்றிப் பெரியவரைத் தூக்கிக்கொண்டு சென்று தமது ஆலயத்துள் விட்டனள். உள்ளிருந்து மணியொலி, சங்கொலி முழங்கின. கூடவே பெரியவரின் தேவார வாயொலியும் துல்லியமாகக் கேட்டது. இது கேட்ட சிலர் கோயிலைத் திறப்பித்துப் பார்த்த பொழுது, பெரியவர் நிர்வாண கோலத்தில் கண்ணீர் மல்கியபடி வெளிப்பட்டார். நிகழ்ந்த அம்பிகையின் திருவிளையாடலை விண்டுரைத்தார். ஆங்குற்றோர் அம்பிகையின் கடாட்சத்தை யுன்னி யுன்னி உளநெகிழ்ந்து போற்றி பெரியவரையும் கூட்டிக் கொண்டு வெளியேறினார் ஆம்.

**" ஆபத்தில் தோன்றி யெமைத் தூக்கிக் காக்கும்**
**அன்னையிவள் அருளாட்சி என்னே என்னே "**

உ

# துஷ்ட நிக்கிரகம்

பலகாலும் எம் அம்பிகையை அவமதித்து உதாசீனஞ் செய்வது அயலிலுள்ள ஓர் இளைஞனின் வழக்கமாக இருந்தது. ஆதிமூல நாயகிக்குக் கால் நீட்டியபடி, ஆலய வெளி மண்டபத்தில் படுத்தலும் இவரின் சில நாட் சேட்டையாகும்

1994ம் ஆண்டில் ஒரு நாள் மாலை 6 மணியளவில் இவர் ஆலய மேற்குவீதி வழியாகத் துவிச்சக்கர வண்டியில் அலட்சியமாகப் போய்க் கொண்டிருந்த பொழுது, முன்னர் ஆலமரம் நின்ற மையத்தில், கறுத்த உருவங்கொண்ட மூதாட்டியொருவர் இருக்கக் கண்டார். அடிக்குமாபோல் கையோங்கியபடி இம்மூதாட்டி எழுந்து விரைவாக இளைஞன் முன் தோன்றி உக்கிரமாகப் பார்த்தார். பயந்த இளைஞன் "ஐயோ" என்று குரலெழுப்பிய வண்ணம் ஓடினார், சனங்கள் கூடிவிட்டனர். தாற்பரியத்தை அறிந்து, ஆலய திருமஞ்சனக் கிணற்று நீரினால் முகம் கழுவுவித்து அம்பிகையை வணங்கச் செய்ய வைத்தனர். நேர்த்திகள் செய்து நிவாரணம் பெற்ற அவ்விளைஞன் தன்னையே திருத்திக் கொண்டான்.

"அசுரக் குணங்களை அடித்து நொறுக்கும்
அம்பிகை தாள்பணிந் துய்ந்திடு வோமே"





ஸ்ரீலஸ்ரீ ஆ. முத்துக்குமார ஆச்சாரிய சுவாமிகள்

## இவர் இயற்றிய நூல்கள்

1) சிவஞான தத்துவ தீபம்

௨) தியான யோக சரவணபவ மாலை

3) மணிவாசக சரிதாமிர்தம்

4) கதிர்காம முருகேசர் ஆறாதாரசடாட்சர அந்தாதி

உ

## ஞானசங்கரி - முத்திப்பிரதாயினி

எமது தாய்மாமனாரும், ஆலயநிர்வாகஸ்தர் கா. செல்லையா அவர்களின் மூத்த சகோதரியின் கணவருமாகிய ஸ்ரீலஸ்ரீ ஆ. முத்துக்குமார ஆச்சார்ய சுவாமிகள், அம்பிகையின் அருட்பிரவாகத்தினால் முருகப்பெருமான் துணைகொண்டு. ஞானபோதமும், தமிழ்ப் புலமையும், பன்மொழித் தேர்ச்சியும் வந்தெய்தப்பெற்றார்.

மைஷ சுவாமிகள் இந்திய பொள்ளாச்சி வேட்டைக்காரன் புதூரில், அழுக்குச்சுவாமிகள் மடாலயத்திலிருந்து பல வருடங்கள் தவ வாழ்வு வாழ்ந்தவர். அங்கு **"மணிவாசக மன்றம்"** எனும் வாசிகசாலையை நிறுவி, புராணபடனங்களையும் சமயப் பிரச்சாரங்களையும், தத்துவஞான விரிவுரைகளையும் செய்துவந்தார். இவர் முதுபெருந் தத்துவஞானி. சிவஞான தத்துவ தீபம், தியானயோக சரவணபவ மாலை, கதிர்காம முருகேசர் ஆறாதார சடாட்சர அந்தாதி, மணிவாசக சரிதாமிர்தம் ஆகிய செய்யுள் நூல்களின் ஆசிரியருமாவார்.

மேற்படி அழுக்குச் சுவாமிகள் மடாலயத்தில், தமது தவவாழ்வில் தினமும் நிஷ்டைகூடி, ஈற்றில் தாதுவருடம் பங்குனிமாதம் **23ம்** திகதி **(05-04-1937)** மாலை உத்திராட நட்சத்திர சுபதினத்தில் மகாசமாதி அடைந்தார். இவரது நினைவு விழாக்கள் வருடாவருடம் இந்தியாவில் நடைபெற்று வருகின்றன.

சுவாமிகள் நீர்வேலியில் வசித்த காலங்களில் எமது அம்பிகையின் ஆலய வளர்ச்சியில் பெரும் அக்கறையுடன் ஈடுபட்டு அரிய சேவைகளும் புரிந்து வந்தார். அம்பிகையின் அருட்பார்வையினால், யாவரும் யாண்டும் பாடியடித்தற்காய தெய்வீக வசந்தன் பாடல்களை யாத்து, **1920ம்** ஆண்டளவில் இவ்வம்பிகையின் ஆலய முன்றலிலேயே, பாடலும் பாடியடித்தலுமாகிய வசந்தன் அரங்கேற்றமும் செய்வித்தார். ஊரவர்கள் யாவரும் வேற்றுமையிலாது ஒன்றுகூடி இதயசுத்தியுடன் பங்கு கொண்டனர். இதில் வேளாண்மைக்காகிய

பயிர்வசந்தன், மேகவசந்தன், மழைவசந்தன் என்னும் மூன்று அங்கங்களும் சேர்ந்திருந்தன.

இதன் காப்பு விருத்தமொன்றில், எம் அம்பிகையை அக்கால வழக்கின் பிரகாரம், "மீனாட்சி" என விழித்துப் பாடியுள்ளார். இவ்விருத்தத்தை ஈண்டுத்தருவாம்.

சத்தியந் தவறாது பத்திசெய் துருகிநின் சன்னிதியில் வந்துநின்றே
சந்ததந் தொண்டுசெயு மன்பர்கட் கருள்தருஞ் சர்வபூ ரணியம்மையே
துத்திய மிகுந்தகக வாரியே யாரணைஞ் கரகுரகர் புவிபோற்றிடும்
துங்கமா சற்றமலை மங்கையரி தங்கையே தும்பையம்புலிசூடியே
அத்தியை யுரித்துமுப் புரமதையெ ரித்துவிதி யழகுசிர முந்தரித்த
அரனா ரிடப்புறமெ டுத்தபர மேஸ்வரி அன்புடனுனைப் பரவியே
சித்திக ளடைந்துயர் வசந்தனை யடித்திடச் சீரருள்புரிந் தாளுவாய்
திருநீரவை நகர்மருவு சங்கவை யம்பதித் தேவிமீனாக்ஷி யுமையே!

இந்த வசந்தனைப் பாடியடித்து முடித்த அன்று இரவு, கடுங்கோடை காலமாயினும், மேகமதிர்ந்து முழங்கி, மின்னலிடியுடன் மழை சோனாவாரியாகப் பொழிந்தது. இதனால் அன்றைய நாட்களில் நிலவிய வெப்பமும், வெப்புநோய் துன்பங்களும் தணியப்பெற்றும், பயிர்வகைகளுங் குளிர்ச்சியினால் செழிப்புற்றும் வளர்ந்தன. மக்களும் இன்புற்றிருக்க ஏதுவாகியதெனலாம்.

"இசையொடுசேர் ஆடல்கண் டுவந்துமழை பொழியும்
ஈஸ்வரியின் கருணைமழை பொங்கியெமை வாழ்த்தும்."

அம்பிகையும், ஞானசங்கரி – முத்திப்பிரதாயினியேயாம்.

உ

## ஆலடியும் அம்பிகையின் தரிசனமும்

இக்கோயிலின் ஆதிமூலக் கட்டடம் அமைந்திருந்த பகுதியின் கீழ் பாரிசத்தில், ஏறக்குறைய நானூற்றைம்பது வருட பழைமை வாய்ந்த ஆலமரம் ஒன்று தலவிருட்சமாக விழுதுகள் பரப்பிநின்று நிழல் தந்தது. இதன் மேற்குப்புற அடிப்பாகத்தில், பெரிய திருவாசிபோன்ற ஓர் அமைப்பு இயற்கையாகவே அமைந்திருந்தது. இதுவே அம்பிகையின் தரிசன பீடம் போலும்! இதில், அம்பிகை அலங்கார பூஜிதையாக வீற்றிருந்து, புறக்கண்களிலும் தெரியத் தக்கதாகத் தரிசனங் கொடுத்துவந்ததைச் சிலர் கண்டு வணங்கியுள்ளனர். சிறியேனும் மூன்றுமுறை அத்தகைய தரிசனத்தைக் காணும் பாக்கியம் பெற்றேன்.

இது காரணமாக எம் அம்பிகையை 'ஆலடியம்மன்' என்று யாவரும் அழைத்து வந்தனர். முதுமை காரணமாக இவ்வாலமரம் இன்று ஈங்கில்லை. எனினும், இந்நிலையத்தில் இஞ்ஞான்றும் காலத்துக்குக் காலம் அடியவர்கட்கு அம்பிகை அருட்காட்சி கொடுத்து வருகிறார். இதுகண்டு பலரும் வியக்கின்றனர்.

குறிப்பாக ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமார ஆச்சார்ய சுவாமிகளின் மகளார் பூரணாம்பிகை அவர்கள் தமது சீவிய காலம் முழுவதும் அம்பிகையின் தொண்டுகளைச் செய்து, இவ்விடத்திலும் பொங்கல் படைத்து வழிபாடு செய்தும், அம்பிகையின் பூரணமான திருவருளைப் பெற்றார்.

**"அருவமாய் நின்றெமக் கருள் தரும் அம்பிகை**
**உருவமாய் நின்றொளிர்ந் தருள லற்புதமே"**



ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமார ஆச்சார்ய சுவாமிகளின்
வசந்தன் பாட்டுகளில் வருபவை

# மேகவசந்தன்

உச்சித முப்புவ னத்துயி ரெச்சுக முய்த்திட வாழ்வருளும்
ஓதிடு மேழ்வித மேகமதிர்ந்து முழக்கிய னுக்ரக மாய்
மெச்சிடு பொற்சொரி புட்கல வர்த்தமி ரத்நசம் வர்த்தமொடே
மேதகு பூசங் காரித மேமண் வீசுது ரோண முகில்
பச்சென வொப்பிடு கற்சொரி காளமு கிப்பட ரக்கினி யும்
பாசுறு நீலவ ணப்பெயர் முறைமுறை பகர்தரு முகிலொருவி
எச்சுறு பச்சைநி றப்பரி விச்சுவ கன்மபி ரானே றும்
ஏருறு மாவர்த் தமுமினி தொடுபுவி யிசைபெற வாவா வே.

## தரு

தந்த – நத்தந் – தத்தன – தத்தன – தந்த – நத்தந் – தா னினா
தான – தத்தந் – தத்தன – தத்தன – தான – தத்தந் – தா னினா

தண்டு சங்கஞ் சக்கர முங்கோ தண்ட முங்கைக் கட்கமுறுங்
கொண்டல் வண்ணன் நித்திரை யொத்திடு மண்டு கடல் வாரியிலே (தந்)

தும்பை கொன்றை கொக்கினி றக்கொடு திங்கள் கங்கை வேணியனார்
ஐந்துவத னத்துட னிங்குற வந்த விச்வ கன்ம னிவர் (தந்)

கொண்ட லென்னுஞ் சத்த முகிற்களி லுண்டி டும்மும் மழைபொழிய
விண்டி டும்ஆ வர்த்தமெனும் முகில் மண்டி நீரங் கொண்டெ ழவே (தந்)

தெண்டி ரைச்ச முத்திர வாரியை யுண்டெ முந்தா வர்த்த முகில்
விண்ப டர்ந்தே பப்பட கடதட வென்ற திர்ந்தா ரம்ப மிட (தந்)

கண்ணை யெட்டிக் கொட்டிய தொப்பிட விண்ணில் முட்டித் தட்டி வரும்
மின்னல் தட்டுக் கெட்டிட மின்றியே தன்னை யெட்டிக் காட்டி டவே (தந்)

செங் கதிர்க்கண் வெப்பம டக்கியே மங்கு லெங்குந் தங்கி டவே
கங்கு லுற்ற தொப்பிட விப்படி யிங்கட ர்ந்த கார்முகிலே (தந்)

சிந்து முத்தொ துக்கிய டித்திட வந்து ருட்டும லைபுரள
கொந்தளித்த கடல்துயி லேரியுமெ ழுந்து பட்சி யெங்கெனவே (தந்)

சங்க ரன்பைப் பாம்பது மேங்கியே தங்கு புற்றைத் தேடி டவே
மங்குல் கண்ட மஞ்ஞை யுளங்களி பொங்கி யாடிக் கூடி டவே (தந்)

கொஞ்சி டுஞ்சொற் கிள்ளையு மொத்திடு கோகி லங்கள் கூவிடவே
அஞ்சி டும்புள் மற்றுவி லங்குகள் துஞ்சு சாகைக் கேகி டவே (தந்)

வண்டு மொட்டுக் கிண்டிய லர்ந்திட வார்ந்தி டுந்தண் டேனை யிமிர்ந்
துண்டு காதுக் கின்ப மளித்திடு பண்கள் பாடிக் கூடி டவே (தந்)

இன்ன வண்ணம் மேக மெழுந்தது மென்ன தன்மை யெனப்பரி வாய்
உன்னி டிற்புவி மன்னிய சீவர்க ளின்ன லுற்றத றிந்திட லும் (தந்)

மித்தி ரன்றன் வெப்பமு மெத்தியே குட்டை யேரித டாகமெலாம்
வற்ற வற்ற வளங்கள் குறைந்திட லுற்று நோக்கி யிரங்கி யரன் (தந்)

ஆனி னஞ்சல பானம ருந்திடு நீர்து றைப்படி தூளி யெழ
மானி டர்நெஞ் சங்க ளுலர்ந்திட லான தன்மைகள் கண்டு மரன் (தந்)

தன்னை யொத்திடு விச்சுவ கர்மனை யுன்ன வத்தரு ணத்தி னிலே
மின்னு திர்த்து முழக்கிய திர்த்திட வன்ன வன்கார் சேருமதே (தந்)

கொண்டல் வந்து மழைக்குறி காட்டியே மண்ட லம்பரி வேட முற
உண்டு பண்ணி வடக்கில் வெளுத்து இருண்டு தென்கடல் புக்கி யதே (தந்)

புக்கி யுண்ட புயற்களு முத்தர திக்க டைந்து இருட்டி வர
முக்கி மாருதம் வீசிட வேபல திக்க டைந்து பரந்த னவே (தந்)

மேகமானது கர்ச்சனை யிட்டிடி யோடுகட்பறி மின்னல்களும்
மாகமுற்ற விசித்திரவானவில் சோதியற்கெதிர் வாய்ந்ததுவே (தந்)

இந்தவண்ணம் மின்னல் முழக்கொடு வந்ததிந்தக் கார்குலமும்
முந்திவெப்பத் தாலுயிர்நொந்தன கண்டிரங்கிப் பொழிய மழை (தந்)

## மழை வசந்தன்

தெந்தெனத் – தென்னானோ – தென்னாதென – தெந்தெனத் – தென்னானோ
தென்னான – தெந்தெனத் – தென்னானோ – தென்னாதென – தெந்தெனத் – தென்னானோ

செழுங் – கந்தமலரயனும் – பயன்பெறத் – தந்திடுமம்புவியும் – இசையுற,
வந்திடு மிந்திரன்முன் எண்பாலர்பு ரந்திடு மெண்திசையில் – தெந்

எழு,மக்கினி சண்டனொடே – நிருதியி – ருக்கின்ற தெற்கினிலே – ரவியொ
மிக்க நடந்திடவே – மிகுதாப – வெப்பமுங் கொண்டிடவே – தெந் (ரு

பரிதியும், உத்தரஞ்சென்றானே – மகரத்தை – யொட்டிநடந்தானே – மகரம்
டக்குடம் நின்றானே – அதையும்விட் – டப்புறஞ்சென்றானே – தெந் (விட்

கதிரவன் மீனத்தி லேறிடவே – அதியுஷ்ண – வீனத்தில்வீறிடவே – ஒரு
தானத்தி நண்ணுறவே – வசந்தனை – மானத்தென் கால்வரவே – தெந் (மேடத்

விருட்சங்கள் மொட்டிட் டரும்பிடவே – சிலமரம் – புட்பித்து நின்றிடுமே
முற்றிப் பழுத்திடுமே – பழுப்பிலை – கொட்டியு திர்த்திடுமே (சில இலை

செடிகொடி, ஒத்துத் தளிர்த்திடுமே – ஆகாயிவை – எத்தைநிகர்த்திடுமோ – தென்றலெனும்
பத்தா, வருவதையே – குயில்சொலப் – பத்தினி யாம் மரங்கள் – தெந்

இதுவரை, விட்டுப்பிரிந்திருந்த – கணவருங் – கிட்டிவருகையிலே – தாங்கள்
கட்டுங் கறுப்பாடை கழற்றிச் செம் – பட்டையுடுத்தனபோல் (முன்னங்

மரங்கள்முன், விட்டதளிர்சிவந்து – பின்வெள்ளித்த, கட்டையொத்தே சிறந்து – அதன்பின்பு
கட்டும் பச்சைநிறமே – பகர்ந்திடி – லொத்திடுஞ் சாலவித்தை – தெந்

இந்தவிதந், தென்றலும்வீசிடவே – உஷ்ணங்க – ளகன்றேகுளிர்ந்திடவே
நின்ற வுயிர்களெல்லாஞ் – சுபகர – வின்ப மடைந்தனவே – தெந் (யுலகினில்

தண்டேனிமிர், வாசனை மாமலர்க – ளெழிலுறு – சோபிதமாய்விளங்க
கோகிலங் கிள்ளைகளும் – மனங்கவர் – கீதசுரம் பாட – தெந் (விசித்திரக்

குதூகலக், கானக்கலாபமயில் – ஒயிலுடன் – தோகைவிரித்தாட – மலர்க
ரேனமர் தாதளையும் – வரிவண் – டிராகவி சைபயிலும் – தெந் (ளின்

தங்களிட்ட, சித்திகள் போகமுற – பஞ்சாக்கினி – மத்தியில் நின்றுகொண்டே – பொறிபுலன்
புத்திய டக்கியருந் – தவபலன் – சித்தியு றும்வரையும்

பசியொடு, தங்களுடலமதைச் – சுருக்கித்த – பித்திடுங்காலமதில் – சிவன் வந்து.
மங்கள மாகவரம் – ப்ரசன்னமாய்த் – தந்திடும் போதினிலே – தெந்

அவர்களி, பொங்கியரன்புகழைத் துதித்துப்பிர் மானந்தங் கொண்டிடல் போல்
ஏரிமடு, எங்கும்வரண்டுவரத் – தவளைகள் – தங்களைத் தாமொடுக்கி

மழைவரக், குட்டைகுளங் கேணி – கழனிகள் – முட்டஅவைகூடி – மகிழ்வுடன்
தட்டத் தறட்டவென்றே – யிட்டப்படி – சத்தமிட்டே குதிக்கும்

செகத்குரு, கண்ணாள ராலயத்தே – மூன்றக்கினிக் – காரியங்கள் சிறக்க–அவரிடம்
மண்ணாளும் மன்னர்முதல் – பலதொழில் – மாக்கள் – வந்தேநிறைக்க – தெந்

அவரவர்க், கேற்றதொழிற்குரிய – வழிவகை சாற்றியவர் பிழைக்க,இணங்கிய
ஆற்றலுறுங் கருவி – யிதம்பெற – வாக்கிக் கொடுத்தருள்வார் – தெந்

கருவிகொண், டெத்தொழி லாளர்களும் – அவரவர்க் – குற்றதொழிற்புரிவார், புரிதர
வெத்திசையுங் கொடுக்கும் சிறப்பெல்லா மேர்ச்சிறப் பென்றெடுக்கும்

உலகினில், எவ்வுயிர்க்கும்இனிய – உணவுகட் – கேற்ற பயிர்வளர்க்கும் வேளாளரோ
டொவ்வும் மறுவுழவர் – அகமகிழ்ந் – துற்றதொ ழிற்புரிவார்

இந்தவிதம், எங்கெங்கே பார்த்திடினும் – கம்பீரமாய் – மங்கலவோசையொடே, குதூகலம்
பொங்கிட வேமழையும், – விழைவுறப் – பெய்தது வேபுவியில்

## பயிர் வசந்தன்

### விருத்தம்

விண்சொரிந்த மழைசெறிந்து வெப்பொழிந்து விரவியே
வெறுநிலங்கு றிஞ்சிபாலை மருதமுல்லை நெய்தலின்
பண்பறிந்து நன்செய்புன்செய் பயிர்புரிந்து பலனிலே
பரவுமரசர் பிதுர்களதிதி பலருமுறவர் மகிழவே
தண்படர்ந்த கங்கைமரபு தந்தகுவளை மார்பினர்
தாவுகின்ற மேழியம்ப தாகைபெற்ற தகைமையோர்
கண்பரந்த கொடையராய கவினுறுங்கா ராளர்கள்
கதிரறுத்து மணிதுலக்கி யகமொதுக்கி வாழ்கவே!

### தரு

தெந்தென்னா – தெந்தென்னா – தென்னா – தென – தெந்தென்னா – தெந்தென்
தென – தெந்தென்னா – தெந்தென்னா – தென்னா – தென (னா – தென்னா

தண்ணம ரும்மரு துறைவான் – ஒரு – தந்திமு – கன்றுணை வருவான் திருக்
கண்ணன் மருகனும் வருவான் – மாவைக் – கந்தனும் வந்தருள் தருவான்

கவின் துன்னுமி லைத்திரி – சூலங் – கொண்டு சோதி வயிரயன் வருவான்
தாளில்,மின்னும் வீரக்கழல் வீக்கி – எழில் – வீரபத்த் ரன்வந் தருள்வான்

தண்டு ளவம்அணி மாயற் கருந் தங்கைகா மாட்சிகண் காண, வரி,
வண்டு பண்பாடெழிற் காடைப் பதி வாழ்வுற வந்தருள் தாயை – தென

இடப் பங்குறவைத்தி டும்பரமன் – சடைக் – கங்கையால்உய்த்திடும்பயிர்கள்
மிகப் பொங்கிச் செழித்திடும் பழனந் – தரு – பூங்கதிர்ச் சேர்த் திடு வோமே

கடல், அள்ளிய கார்மு கில்மூட – எதிர் – ஆர்த்து மயில்களு மாட, வண்ணக்
கிள்ளைகள் பாட்டினைப் – பாட, வெயிற் கேடற மாமழை வீழ – தென

அந்த, எல்லையி லேர்பயிர்புரிக – வெமக் – கேற்ற படைகளைத் தருக, வெனக்
கொல் லுலைக் கம்மியர் கோட்டம் – சென்று – கூறிப் பரிவுடன் கேட்பம்

அவர், வாழ்த்திப் பயில் படையீய – நாமும் போற்றிக்கொண் டேமிடி வீய
வுற்றுத், தாழ்த்தி யுழுதுபண் படுத்து – நிலத் – தன்மைக் கிசைந்தநெல்லெடுத்து

ஈர்குச் சம்பாஊசிச் சம்பா கமுகம் – பூவின் – சம்பா வொ டேகருஞ் சம்பா
சம்பா வட்டக்குண்டுச் சம்பா – குருவிச் – சம்பா வுடன் குறுஞ்சம்பா (கனகச்,

சடைச்சம் பாகுன்று மணிச்சம்பா – சிறு – சம்பா கொத்து மல்லிச்சம்பா பெருஞ்
சம்பா சிறுமணிச் சம்பா – முத்துச் – சம்பாநற் கோதுமைச் சம்பா

வெண், சம்பாவுங் கைவரைச் சம்பா – மணிச் – சம்பாவுஞ் சந்தனச் சம்பா
வேடைச். சம்பா புனுகுசம் பாவும் – மிளகு – சம்பாவும் மல்லிகைச் சம்பா

பவளச், சம்பா செம்பவளச் சம்பா – பாற் – சம்பாநற் சீரகச் சம்பா
நற், சம்பாக்கள் பற்பல தேடி – விதைத் தன்பாகக் கூடியே கோடி

இன்னுங், கூர்க்கறுப் பன் கருங் குறுவை – தினங் – கொள்ளு மறுபதாங் குறுவை
வெள்ளைக், கல்லுண்டை பூம்பாளை கடப்பு – நன்கு – காட்டிய வாணன்பெர் வெளுப்பு

ஏழிற்,கார்பறங் கிப்பேட்டைக் கறுப்பு – அருஞ் – சோதிநெற் பேர்பெறுங் கறுப்பு
பெரு,வெள்ளைநற் பாளைகள் சிதறி யெனக் கொள்பெருந் நெற்களும் விரவி

இன்னும், பற்பல வாஞ்சிறு நெற்கள் பல மக்கட் கிசைந்திடுஞ் சொற்கள் – பெறு
நன்செய் வயல்களைப் போலே மற்றைப் புன்செய் நிலம்பயிராலே – நீர்

தங்குற வேவரப் புயர்த்தி அதிற் றானியங் கள் விதைத் தடர்த்தி – இடர்
ஆக்குங் களைகளைப் பறித்து பயிர் ஆக்குந் தொழிற்களைச் செறித்து – மணி

தேற்றும் பருவமுந் தேர்ந்து – கதிர் – சேர்க்கும் பருவமு மோர்ந்து
இப்போ, வெட்டியொன் றாகவே கூட்டி அன்பாய் விக்கின கந்தனை நாட்டி

மாடு, கட்டிமி தித்திட வேண்டி நடுக் கம்பமொன்றையதி லூண்டி – வானச்
சந்திரா தித்தருங் களிக்க மற்றைச் சர்வஉ லகமுஞ் செழிக்க – சிந்

தைந்து மரத்தை யொன் றாக்கித்தந்தஆசாரி மைந்தனை நோக்கிப் – பொலி
யென்றென்றே நன்றிபாராட்டிப் பெருங் குன்றுபோ லேபொலி கூட்டும்

இந்த, மானுடர் மற்றுயிர் காக்கும் பொருள் தானிய மென்று நீர்நோக்கும்
நம, துள்ளசெல் வஞ்சீரின் பெருமை உன்னின் ஏரின் சிறப்பெனு மொருமை – இந்த

மண்ணி லுள்ள உயிர யாவும் பசித் துண்ணுத லேரினா லாகும் – எங்கள்
கண்ணகல் பார்வஸம் யாவும் புவி – பார்க்கிற் பயிர்வளத் தாகும் – ஏழிற்

பண்ணும் பயிர்வளம் யாவும் நாங்கள் பார்த்திடி லேர்வளத் தாகும் – எங்
கராள ரேர்வளம் யாவும் அந்தக் கண்ணாளர் கைத்தொழி லாகும் (கள்

எங்கள், வீடு மாடங்கூட மேது மற்ற வீட்டுத் தட்டுமுட்டு மேது – இந்த
நாடு நகரமு மேது பெரும் நாட்டுக்கொண் டாட்டமு மேது – எங்கள்

கோவில் குளங்களுமேது சர்வ கொண்டாட்டந் தந்ததா ரோது – துயில்
பாயல் கட்டில்மெத்தை யேது இவை பாவிக்கத் தந்தரா ரோது – எமக்

கிந்தநல் வாழ்வினைக் கொடுத்தார் அவ ரெங்களுக் கீனரென் றெடுத்தால்
சொந்தத், தந்தையைத் தூஷித்தமைந்தன் விழுந் தாழ்நர கேகதி சொந்தம்

இந்தக், கம்மாளர்க் காசாரிப் பட்டம் இது சும்மாதான் வந்ததோ சட்டம்
அவர்.ஆசாரி என்றபேர் பெற்றும் நல்ல ஆசார தூய்மைக ளற்றும் – சுய

கல்வி கேள்வியறி வின்றி மிகக் கண்டதுர்க் கோலங்க ளொன்றி – அவர்
கொல்லுலை யானது மறையில் இந்தக் தொல்லுல கோர்நிறை குறையும்

முன்னே, பட்டணத் தார்கம்பர் சொன்ன புகழ்ப் பாடல்கள் கேட்டது மென்ன – இப்போ
தன்னவர் தம்புகழ் பாடி நல்ல அன்புடன் நம்மவர் கூடி – இந்தச்

செந்நெ லரிந்தரிச் சூட்டைக் களஞ் செய்து நடத்திடும் பாட்டை
அங்கே, போர்செய்து போர்க்களந் தன்னில் புகழ் போந்திடு நெற்பொலி மன்னில் – செங்

கோலர சர்நன்குவாழ்கப் பொன்னைக் கோரிய வைசியர் வாழ்கக் – கலை
நாவலர் பாவலர் வாழ்க நகர்க் காவலர் ஏவலர் வாழ்க – இந்தக்

காசினி யோருமீ டேற வருகம்மியர் மேன்மைபெற் றேறப் – பொலி
தன்னிற் சிலர்நின்று விளக்க அதை முன்னிச் சிலர்தூற்றி யளக்க – வளர்

விற்பொலி பொற்பொலி யுண்டாம் உயர் விண்பொலி மண்பொலி வுண்டாம் – புகழ்ச்
சொற்பொலி வுட்பொலி வுண்டாம் கலித் துன்பப் பொலிசற்று மண்டா மவே.
இன்பப் பொலிமலைப் போலே வரு மெங்கட்கு நெற்பொலி வாலே

(தென – தெந்தென).

உ

# திருவூஞ்சற் பதிகங்கள்

எமது மாமனார் விஸ்வகலாமணி, பண்டிதர் இ.சி.கந்தையா ஆச்சாரியார் பாடிவழங்கிய பதிகங்களே பாடப்பெற்று, அம்பிகையின் திருவூஞ்சல் ஆட்டப்பெற்று வந்ததெனினும், அவை 1980ம் ஆண்டளவில் கைநழுவிவிட்டன. பின்னர் யாம் யாத்து வழங்கிய ஊஞ்சற் பாடல்களே ஊஞ்சலாட்டற்கு உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன.

## *ஊஞ்சலிசையும் – ஒளிவிளக்காடலும்*

1994ம் ஆண்டு பங்குனி உத்தர வருடாந்த விழா நிகழ்வு நடைபெறும்போது வெளிமண்டபத்திலேயே அம்பிகை திருவூஞ்சல் ஆடும்பொழுது, அடியவர்கள் யாவரும் அதிசயிக்கத்தக்கதாக, கர்ப்பக் கிரகத்திலுள்ள ஆதிமூல நாயகியாரின் இருமருங்கிலும் தொங்கி ஒளிவீசிக்கொண்டிருந்த தூக்குவிளக்குகளிரண்டும், எவரும் ஆட்டிவிடாமலேயே தாமாக ஊஞ்லிசைக்கேற்ப அசையத் தொடங்கி ஒரு மணித்தியாலத்திற்கு மேல் அசைந்தாடியவண்ணம் இருந்தன. இதைப் பார்த்ததிசயித்து யாவரும் "**அரோகரா**" கோசத்துடன் அம்பிகையைத் தொழுது கைகூப்பி நின்றனர்.

**" அவள் அசைவில் ஐம்பூதங்கள் தாம் ஆடும் ~ அவள் ஊஞ்சலிசையில் ஒளிவிளக்கும் ஆடும்! ஆடும்! "**

உ

# நீரவேலி – சங்கணைவைப்பதி,
# ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன்
# திருவூஞ்சல்

## காப்பு

சீர்பூத்த கலைஞர்பல ருந்தாம் போற்றச்
சிவம்பூத்த தலம்திகழ்நீர் வேலி மேவும்
ஏர்பூத்த சங்கணைவைத் தேவி யார்க்கே
எழில்பூத்த திருவூஞ்சல் ஏத்திப் பாடத்
தார்பூத்த திருமகுடந் தலைமேல் ஏந்தித்
தரணியைத்தன் றாள்களிலே தாங்கி யாடும்
பேர்பூத்த பிஞ்ஞகச்செம் பிரானா ரீந்த
பிரணவ விநாயகன்றாள் காப்ப தாமே!

## நூல்

பேசுமுயர் நால்வேதங் கால்க ளாகப்
பெரிய சிவாகமங்கள் விட்ட மாக
வீசுதிரு மந்திரங்கள் ஞாண்கள் ஆக
விழுமியநற் பிரணவமே பலகை ஆகத்
தேசமிகு மட்சரங்கள் அணைகள் ஆகத்
தெருளீயும் அருளூஞ்சல் தனிலே யேறி
ஈசுவர பாசமிகு நீரவை மேவும்
இராஜரா ஜேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல்.

நேமேவு தொண்டர்பலர் யாழை மீட்ட
நெறிமேவு சீரடியார் சுருதி கூட்டப்
பூமேவு பூவையர்கள் தாளம் போடப்
புகழ்மேவு புனிதர்பலர் பாடல் பாடத்

தேமேவு திறத்தர்திரு நடனம் ஆடத்
திருமேவு மூதறிஞர் ஆசி கூறப்
பாமேவு பத்தர்குழாம் பரவு நீர்வைப்
பதியுறை ராஜேஸ்வரியே யாடீர் ஊஞ்சல்.

கொம்புதுடி சங்கமொடு முரசம் ஆரப்பக்
கோதில்சே மக்கலத்தின் ஒலியும் ஆர்ப்பத்
தும்துமென மத்தளத்தின் ஒலியும் ஆர்ப்பத்
தூய்மைபெறு மாமணியி னோசை ஆர்ப்ப
அம்மையணி மணியார மசைந்தே யார்ப்ப
ஆகாகா எனவடியார் ஆடி யார்ப்ப
அம்புவியும் நிறைவுபெற அரசும் ஆர்ப்ப
ஆலடிரா ஜேஸ்வரியார்த் தாடீர் ஊஞ்சல்.

மாலவன்பூ மகளொடுமோர் வடந்தொட் டாட்ட
மலரயன்நா மகளொடுமோர் வடந்தொட் டாட்ட
வேலவனும் வள்ளியுமோர் வடந்தொட் டாட்ட
வெய்யோன்சந் திரனொடுமோர் வடந்தொட் டாட்டக்
கோலமுயர் நான்மறைமங் களங்கள் பாடக்
கொற்றவர்வா ழியவாழி யென்றே வாழ்த்த
ஞாலமதில் தழைத்தோங்கு நீர்வை மேவும்
நல்லவிரா ஜேஸ்வரியே யாடீர் ஊஞ்சல்.

மகரமுல விடுகடலி லாழ்ந்தே யாடி
மாபெருமண் டலங்களெலா மோடி யாடிச்
சிகரமிகு மலைகள்பல தாண்டி யாடிச்
சீர்த்தாடு சிங்கமதி லெங்கும் ஆடிக்
ககனவெளி தனிலுமொளி கூட்டி யாடிக்
கங்காத ரன்பாதி யாய்வந் தாடி
இகபரசு கந்தருமிவ் வருளா ரூஞ்சல்
ஏறியிரா ஜேஸ்வரியே யாடீர் ஊஞ்சல்.

சீரோங்கு புவனமெலாஞ் சென்றே யாடிச்
சிவமோங்கு சீரியர்க்கா யாட ரூஞ்சல்!
பாரோங்க வருண்மழைநீ பெய்தே யாடிப்
பகவதியே பார்வதியே யாட ரூஞ்சல்!
பேரோங்கு பிரணவத்திற் பரனோ டாடும்
பெட்புநிறை பேடேமீங் காடீர் ஊஞ்சல்!
நீரோங்க நிலமோங்க நீர்வை யூர்க்கண்
நிறையுமிரா ஜேஸ்வரியே யாடீர் ஊஞ்சல்.

கலைகளினின் றுயர்ந்துகக னத்தே யாடிக்
கானவொலி தனிற்கலந் தெங்கணும் நீயாடி
அலைகடலுந் துளங்கிடநீ யாழ்ந்தே யாடி
ஆதியிரா ஜேஸ்வரியே யாட ரூஞ்சல்!
மலைகள்மடு குளங்களெலாஞ் சென்றே யாடி
மாபெரிய தலங்களில்ம கிழ்ந்தே யாடிக்
கலைகள்பயில் கம்மியரோ டுறைந்தே யாடிக்
களிக்குமிரா ஜேஸ்வரியே யாட ரூஞ்சல்.

கவியருளுங் காரிகையே யாட ரூஞ்சல்
களிப்பருளுந் தனிப்பொருளே யாட ரூஞ்சல்
நவிலுபவர் நற்சுருதீ யாட ரூஞ்சல்
நனியினிக்கும் நற்கரும்பே யாட ரூஞ்சல்
புவியினரின் நற்புணையே யாட ரூஞ்சல்
புத்தொளியே வித்தகியே யாட ரூஞ்சல்
தவிசிலிருந் தருளாடி யெம்மைக் காக்கும்
தாயிரா ஜேஸ்வரியே யாட ரூஞ்சல்.

தானந் தவமிரண்டுந் தழைத்தே தோன்றத்
தரணிசெழிப் புறநின்றிங் கார்த்தே தோன்ற
வானங் கறுத்துமழை பொழிந்தே தோன்ற
வையம் மகிழ்ந்துவனப் புற்றே தோன்ற

மோனம் நிலைத்ததவத் தோர்கள் தோன்ற
மோட்சந் தனைவிழையு முயிர்கள் தோன்ற
ஞானப் பெருந்தாயா யொளிர்ந்தே தோன்றும்
நடனவிரா ஜேஸ்வரியே யாடீ ருஞ்சல்.

ஆர்த்தநற் றவவடிகள் ஆட ஆட
அருமறைக ளவனியெலா மாட ஆடக்
கார்த்திகைப் பெண்கள்களித் தாட ஆடக்
கவினார்சீ ரடியரெலாம் ஆட ஆட
ஆர்த்தாடு மம்பலத் தோன் ஆட ஆட
அண்டியடித் தொண்டுசெயு மன்பர் தம்மை
ஈர்த்தாடுந் திருவடிகள் எடுத்த சைந்தே
இராஜரா ஜேஸ்வரியே யாடீ ருஞ்சல்.

## வாழி

மதிதருநல் லறிவருளு சைவம் வாழி
மன்னுகலை நீதியுயர் மறைகள் வாழி
கதிதருநல் லறநெறியா கமங்கள் வாழி
கவின்குலவு மகளிர்நிறை கற்பும் வாழி
முதியமறை யவர்கள்தவ முனிவர் வாழி
மூதறிஞர் போற்றுகலை முதலும் வாழி
நிதிதருநெல் வயல்கள்மலி நீர்வை தன்னில்
நிறையுமிரா ஜேஸ்வரியே வாழி வாழி!

## எச்சரிக்கை

காரார்குழல் மாதேசிவ காமி எச்சரிக்கை
கவினார்மதி வதனிஜெய கௌரி எச்சரிக்கை
தீராவினை தீர்த்தேயருள் தேவி எச்சரிக்கை
திகழ்சுத்தசத் தியளெயருட் டேனே எச்சரிக்கை
பேராலடி ராஜேஸ்வரிப் பெயரா ளெச்சரிக்கை
பெட்பார்சிவ சத்தியருட்பேடே எச்சரிக்கை
ஆராவமு தேதேனிகர் ஆத்தா ளெச்சரிக்கை
அடியார்க்கருள் தினமுந்தரும் ஆதி எச்சரிக்கை

## பராக்கு

கற்றவர் போற்று சிவ காமி பராக்கு
காந்தாரி தாபரிக பாலி பராக்கு
நற்றவத் தோரர்த்த நாரி பராக்கு
நரர்சுரர் ஏத்துபர நீலி பராக்கு
அற்புத விலாசினி ஆதி பராக்கு
ஆங்கார தெய்வவோங் காரி பராக்கு
விற்பன விலாசபர வீரி பராக்கு
வீரரா ஜேஸ்வரி விஜையே பராக்கு.

## மங்களம்

தங்குநிதி பொங்குமெழில் நீர்வைநகர் மேவுமிறை சத்தியே திரு மங்களம்
தளிரடி யெடுத்துநட மிடுபுவன சுந்தரி தயாபரி திரு மங்களம்
சிங்கமதி லேறிவிளை யாடிவினை சாடிவரு சிவையம்மை திரு மங்களம்
சீருயர் வளப்புமிகு சேவடி யசைத்துவரு சிவகாமி திரு மங்களம்
அங்கையினி லேந்தியெரி யாடுமெம தன்னையுமை ஆரணி திரு மங்களம்
ஆயகலை கள்பலவு மன்றுமென் றும்அருள் அம்பிகே திரு மங்களம்
சங்கணவை மண்ணிலுய ராலடி யமர்ந்தசிவ சங்கரி திரு மங்களம்
சந்தத மெமக்கருளு மன்னைபர ராஜரா ஜேஸ்வரி திரு மங்களம்.

**ஆக்கம்: தெ. கோபாலசிங்கம்.**

## போற்றி

திண்மையுள தெய்வமே நீர்வை மேவும்
திருத்தேவி கலைக்கடலே காமர் நெஞ்சில்
உண்முகமாய் நின்றாடும் உமையே யுன்னை
ஊராரு மயலாரும் ஏத்திப் போற்றத்
தண்முகங்கொண் டின்னருள்பெய் தாயே யெம்மைத்
தாபரித்தாட் கொள்வை சுகவளங்கள் தந்தே
விண்ணவர்தண் ணடிபோற்றும் வீரிய மாதே
வியனுலக நாயகியே போற்றி போற்றி.

முற்றும்.




நூலாசிரியர் :

**விஸ்வப் பிரம்மஸ்ரீ தெட்சணாமூர்த்தி கோபாலசிங்கம்**

## இவர் இயற்றிய நூல்கள்

1) சத்தி பாடல்
2) களபூமியம்மன் பாடல்
3) கரைப்பிட்டியந்தனைப் பிள்ளையார் பாடல்
4) கதிர்காமத் திருப்புகழ்
5) முறிகண்டி விநாயகர் தோத்திரப்பாடல்
6) நீர்வேலி வடக்கு, அருள்மிகு காமாட்சியம்பாள் திருவூஞ்சலும், பிரார்த்தனைப் பாடல்களும்
7) நீர்வேலி வடக்கு செல்லக்கதிர்காம சுவாமி தோத்திரப் பாடல்
8) வருத்தலைவிளான், மருதடிப்பிள்ளையார் தோத்திரம்
9) பத்திரசப் பிரார்த்தனைப் பாமாலை
10) வவுனியா குருமன்காடு பிள்ளையார் — திருவூஞ்சலும், திருப்பள்ளியெழுச்சியும்.



ஆலயத்தின் பின்பக்கத் தோற்றம்

ஸ்ரீ மீனாட்சி அச்சகம் (கம்பியூட்டர் ஒப்செற் பிறிண்ட்)
315. கச்சேரி நல்லூர் றோட், நல்லூர். - ☎ 2223586